**செய்தி வெளியீடு எண்: 42/2026** **நாள்: 29.05.2026**

**பத்திரிகைச் செய்தி**

**"இளையராஜா நேரலை இசை" கச்சேரிக்கு ஸ்பான்சர் செய்யப்பட்ட பயணச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு தடையில்லா மெட்ரோ பயணம்**

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமசந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையம் அருகில் உள்ள Nehru Outdoor Stadium வளாகத்தில், 30.05.2026 மற்றும் 31.05.2026 ஆகிய தேதிகளில் "Ilaiyaraja Live Musical Concert இன்னிசை கச்சேரி" நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் ரசிகர்களுக்கு தடையில்லா போக்குவரத்தை வழங்குவதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தென்னிந்தியாவின் முன்னணி ஊடக தயாரிப்பு நிறுவனமான ACTC Studio Private Limited உடன் இணைந்து கட்டணமில்லா பயணத்தை வழங்குவதற்காக உடன்பாடு செய்துள்ளது.

ACTC Studio Private Limited நிறுவனம் KYN நிறுவனம் மூலம் நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் (Email) மற்றும் WhatsApp சேனல் வழியாக ஒரு பிரத்யேகமான (Unique) மெட்ரோ பயணச்சீட்டு (Metro Pass) வழங்கப்படும். இந்த பிரத்யேக QR குறியீடு கொண்ட பயணச்சீட்டுகளை பயன்படுத்தி பயணிகள் நிகழ்வு நடைபெறும் நாட்களான 30.05.2026 மற்றும் 31.05.2026 ஆகிய தேதிகளில் சென்னையில் செயல்படும் எந்த ஒரு மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்தும் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு மிக அருகில் உள்ள புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமசந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு சென்று திரும்ப முடியும்.

ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் தனித்தனியாக QR பயணச்சீட்டுகள் வழங்கப்படும். முதல் நாள் நிகழ்விற்கான (30 மே 2026) QR பயணச்சீட்டைக் கொண்டு இரண்டாம் நாள் நிகழ்விற்கு (31 மே 2026) பயணிக்க முடியாது. அதேபோல், இரண்டாம் நாள் நிகழ்விற்கான (31 மே 2026) QR பயணச்சீட்டைக் கொண்டு முதல் நாள் நிகழ்விற்கு (30 மே 2026) பயணிக்க முடியாது.

இசை நிகழ்ச்சிக்கு வருபவர்கள் தங்கள் பயணச்சீட்டுகளில் உள்ள தனித்துவமான QR குறியீட்டை தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகையை ஒரு சுற்றுப் பயணத்திற்கு பயன்படுத்தலாம்.

நிகழ்ச்சி முடிந்து பார்வையாளர்கள் வீடு திரும்புவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமசந்திரன் சென்ட்ரல் மெட்ரோ நிலையத்திலிருந்து மெட்ரோ இரயில் சேவைகளை நீட்டித்துள்ளது.

- வழித்தடம் 1-ல் (நீலவழித்தடம்) புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமசந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் பணிமனை மெட்ரோ நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் நள்ளிரவு 12 மணிக்கும்,
- வழித்தடம் 1-ல் (நீலவழித்தடம்) விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் நள்ளிரவு 12 மணிக்கும்,
- வழித்தடம் 2-ல் (பச்சை வழித்தடம்) பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் நள்ளிரவு 12 மணிக்கும், புறப்படும்.
- பயணிகள் கடைசி இரயில் புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாகவே புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமசந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திற்குள் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த பிரத்யேக சலுகையைப் பயன்படுத்தி, நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்குச் சென்று, தடையில்லா பயணத்தை அனுபவிக்கும்படி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கும், மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் இதுபோன்ற ஒத்துழைப்பை வழங்க சென்னையில் உள்ள மற்ற பெரிய நிகழ்வு அமைப்பாளர்களையும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அழைக்கிறது.

**வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**